1995 மே 5]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் நிறைவுபெறுகின்றன. பேரவை மீண்டும் மாலை 4.00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பிற்பகல் 4.00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

8. அறிவிப்புகள்--தொடர்ச்சி

(ஆ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995 (ஆ.இ)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--தொடர்ச்சி

(ஈ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்தல். 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அனுமதி கோருவார்.